# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 249/மா/2022**

**நாள் : 28.12.2022**

திரு. K. பாண்டுரங்கன்,
சென்னை- 600 050. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, பாடி, ரத்தினம் தெரு, டாக்டர் மூர்த்தி நகர், எண்.11, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. பாண்டுரங்கன் என்பவரின் 29.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.12.2022 அன்று பெறப்பட்டு, 249/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, பாடி, ரத்தினம் தெரு, டாக்டர் மூர்த்தி நகர், எண்.11, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. பாண்டுரங்கன் என்பவர் தன்னுடைய முறையீட்டு மனுவில்,

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு வயது 62 ஆகிறது. நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவன். எனக்கு இதய நோய் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்து சிகிச்சை பெற்றுக்கொண்டு இருக்கிறேன்.

நான் வசிக்கும் வீட்டிற்கு எதிரே சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், ஸ்ரீ மகா இன்டஸ்ட்ரீஸ் (ம) உமாபதி கம்பெனி ஆகியவை இயங்கி வருகிறது. அதில் கேஸ்டிங் Job செய்து வருகிறார்கள். அதனால் பலத்த சத்தம் ஏற்பட்டு கட்டிடமே அதிரும் அளவிற்கு மிகுந்த ஒலியும் ஏற்படுகிறது. இதில் ஏற்படும் மாசு படிந்த காற்று, புகை அப்பகுதியில் உள்ள வீடுகளின் மேல் கறையாக படிந்து எங்களுக்கும், பொது மக்களுக்கும் மிகுந்த தொற்று நோய் ஏற்பட்டு மிகவும் சிரமப்படுகிறோம். எனது

வீட்டிற்கு கீழே 2 ரேசன் கடைகள் உள்ளன. மிகுந்த சப்தம் ஏற்படுவதால் ரேசன் கடைக்கு வரும் பொதுமக்கள் நின்று பொருட்களை வாங்க மிகவும் சிரமப்படுகிறார்கள். இங்கு உள்ள மாணவர்கள் படிக்க முடியாமல் மிகுந்த சத்தத்தின் காரணமாக மிகவும் சிரமப்படுகிறார்கள் மற்றும் சுத்தமான காற்றை சுவாசிக்க முடியாமல் இங்கு உள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மெஷின்கள் ஓடும்போது ஏற்படும் சத்தத்தின் காரணமாக இரவு நேரங்களில் நிம்மதியாக வீட்டில் தூங்க முடியவில்லை. மேற்படி கம்பெனிகளை இந்த இடத்திலிருந்து அகற்ற பலமுறை இங்கு வசிப்பவர்கள் பல புகார்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், அரசிடமும் கொடுத்தும் இன்று வரை எந்த பயனும் இல்லை. மேற்படி கம்பெனிகளை நடத்தி வருபவர்களிடம் இங்கு வசிப்பவர்களும் நானும் சென்று முறையிட்டால் அதனை அவர்கள் கண்டுக் கொள்வதில்லை. மேலும் உங்களால் முடிந்ததை பாருங்கள் என்று மிரட்டுகிறார்கள்.

எனவே ஐயா அவர்கள் மேற்படி பகுதியை பார்வையிட்டு அப்பகுதியில் நடத்தி வரும் 3 கம்பெனிகளையும் அகற்றி பொதுமக்களின் நலன் கருதி பொதுமக்களை பாதுகாக்க வேண்டி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**2) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**முறையீட்டு மனுதாரர் 15.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் எனது வீட்டிற்கு எதிரில் சக்தி என்ஜினியரிங் என்கின்ற நிறுவனம் உட்பட 3 நிறுவனங்கள் இயங்கிவருகின்றன. கட்டடத்தை வாடகைக்கு எடுத்து இயங்கி வரும் மேற்கண்ட 3 நிறுவனங்கள் கேஸ்டிங் வேலையை கடந்த 3 வருடங்களாக செய்து வருகின்றன. லைசன்ஸ் இல்லாமல் 24 மணி நேரமும் இயங்கி வரும் இந்நிறுவனங்களிலிருந்து வரும் கருப்பு தூசிகள் அருகில் உள்ள எங்களது வீடுகளின் மீது படிந்து சுற்றுப்புற சூழ்நிலையை பெரிதும் பாதிக்கிறது. மேற்கண்ட மாசு பாதிப்பால், அப்பகுதியில் உள்ள மக்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்பட்டு பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர். தூசி மட்டும் அல்லாமல், பெருத்த சத்தமும் மேற்கண்ட நிறுவனங்களிலிருந்து வருகின்றன. வயதான, நோய்வாய்பட்டுள்ள நான் மற்றும் இதர குடியிருப்புவாசிகள் இது குறித்து கேஸ்டிங் நிறுவனங்களிடமும், அவை இயங்கும் இடத்தின் உரிமையாளர்களுக்கு புகார் செய்தும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை. தூசி மற்றும் அங்கு ஏற்படும் சத்தம் ஆகியவை குறித்து மாநகராட்சி அலுவலர்களுக்கும், மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் புகார் அனுப்பப்பட்டது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தனது 14.2.2022 நாளிட்ட கடிதத்தில் எங்களது புகார் மனுவின் மீது உள்ளாட்சி அமைப்புகளின் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுத்திட, மண்டல அலுவலருக்கு பரிந்துரை செய்துள்ளது.

ஆனால் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் மண்டல அலுவலகத்தால் எடுக்கப்படவில்லை.

மேற்கண்ட தூசி மற்றும் பயங்கர சத்தத்தினால், இந்நிறுவனத்திற்கு அருகில் வசிக்கும் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி, மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். எனவே, மேற்கண்ட பகுதியில் வசிக்கும் மக்கள் சுகாதாரப் பிரச்சனையிலிருந்து மீளும் வகையில், லைசன்ஸ் இல்லாமல் இயங்கி வரும் மேற்கண்ட 3 நிறுவனங்களை மூடிட தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**15.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் மண்டலம் – 7ன் சுகாதார ஆய்வாளர், உரிமம் ஆய்வாளர் மற்றும் முன்னாள் உரிமம் ஆய்வாளர் ஆகியோர்கள் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை பாடி, மூர்த்தி நகரில் இயங்கி வரும் சக்தி என்ஜினியரிங் ஒர்க்ஸ், விவேகா இண்டஸ்ட்ரீஸ், ஸ்ரீமகா இண்டஸ்ட்ரீஸ் ஆகிய நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பாடி, அம்பத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் சிறு குறு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள மேற்கண்ட 3 நிறுவனங்களும், நிறுவனம் இயங்குவதற்கான உரிமம் பெறாமல் இயங்கி வந்ததால், பிரிவு 287, 288 Chennai City Municipal Corporation Act-1919–ன்படி 24/5/2022 அன்று அந்நிறுவனங்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் மேற்கண்ட நிறுவனங்கள் வாடகைக்கு இயங்கி வருவதாகவும் அந்நிறுவனங்களின் இடங்களுக்கான சொத்துவரி இடத்தின் உரிமையாளர்களிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது எனவும் அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கான தொழில் வரி, அந்நிறுவன பணியாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது என்றும் மண்டலம்-7ன் அலுவலர்கள் தங்களின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும் அம்மூன்று நிறுவனங்களும் லைசன்ஸ் பெறாமல் இயங்கி வரும் காரணத்தால், மண்டல அலுவலரின் அனுமதி பெற்று அந்நிறுவனங்களை பூட்டி மூடிட (Lock and Seal) தேவையான நடவடிக்கைகள் மண்டல அலுவலகத்தால் இன்னும் ஒரு வார காலத்தில் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம்-7ன் சுகாதார ஆய்வாளர், உரிமம் ஆய்வாளர்களின் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

சென்னை பாடியை சேர்ந்த திரு. கே. பாண்டுரங்கன் தன்னுடைய குடியிருப்புக்கு எதிரில் கேஸ்டிங் தொழில் செய்யும் மூன்று நிறுவனங்கள் இயங்குவதால், தனக்கும், குடியிருப்புவாசிகளும் உடல் உபாதைகளால் அவதிப்படுவதாக குறிப்பிட்டு அந்நிறுவனங்களை அகற்றுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், ஸ்ரீ மகா இன்டஸ்டரீஸ் மற்றும் உமாபதி கம்பெனி ஆகியவற்றிலிருந்து வெளிவரும் கருப்பு துகள்களால் சுற்றுபுறச்சூழல் பாதிக்கப்படுவதுடன், அங்கு வசிப்போர்களும் மிகவும் உடல் நலன் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. மேலும் மேற்கண்ட நிறுவனங்களால் ஏற்படும் சத்தம் அங்குள்ள படிக்கும் மாணவர்கள்/மாணவிகள் ஆகியோருக்கு இடையூறாக இருப்பதும் மற்றும் உடல்நலக்குறைவால் அவதிப்படும் வயோதிகருக்கு மிகவும் மன உளைச்சல் ஏற்படுத்தும் என்பதும் வாக்குமூலத்தின் மூலம் தெரியவருகிறது. அந்நிறுவனங்கள் உரிமம் பெறாமல் இயங்கி வருகிறது என்பது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன் அலுவலர்களால் வழங்கப்பட்ட தாக்கீதுகள் மூலம் அறிய முடிகிறது.

மேற்கண்டச் சூழ்நிலையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

சிறு, குறு தொழில்கள் நடத்தும் நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் Chennai City Municipal Corporation Act 1919, பிரிவு 287ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## Industries and factories

287. Purposes for which places within the limits of the city or within three miles thereof may not be used without license and payment of proportionate tax to local body concerned in the latter case. – (1) No place within the limits of the city shall be used for any of the purposes mentioned in Schedule VI without a license obtained from the commissioner and except in accordance with the conditions specified therein:

Provided that no such license shall be required for the use of any place for a lodging house as defined in the [Tamil Nadu] Public Health Act, 1939 ([Tamil Nadu] Act III of 1939) if the keeper thereof has been registered under that Act.]

(2) The commissioner shall, if so required by the council, publish a notification in the [Official Gazette] and in two or more local newspapers that any place at a distance within three miles of the limits of the city shall not be used for any one or more of the purposes mentioned in Schedule VI without a license obtained from the commissioner and except in accordance with the conditions specified therein

## Schedule VI

**xxx**

**Metals- Beating, breaking, digging, hammering, casting, etc.**

**xxx**

மேற்கண்ட விதிகளின்படி மண்டலம்-7ன் கள பணியாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்தால் மேற்கண்ட நிறுவனங்களால் ஏற்படும் சுகாதார கேடுகளிலிருந்து விடுபட்டு குறிப்பாக நோய்வாய்ப்பட்டுள்ள வயோதிகர்களுக்கு, ஒரு நிம்மதியான வாழ்வாதாரம் அளித்திருக்க முடியும் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும், உரிமம் இல்லாமல் இயங்கும் மேற்கண்ட நிறுவனங்களால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு (ம) அவப்பெயர் ஏற்படுவதாக இம்முறைமன்றம் கருதுகிறது.

மேலும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அலுவலகம், மனுதாரரின், மேற்கண்ட மூன்று நிறுவனங்கள் குறித்த, புகார் மனுவினை, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7ன் மண்டல அலுவலருக்கு, தன்னுடைய 14.2.2022 நாளிட்ட கடிதத்தில் உள்ளாட்சி அமைப்புகள் சட்டம்-2ன் படி மேல் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. ஆனால் எவ்வித மேல் நடவடிக்கையோ, கள ஆய்வோ மேற்கொள்ளவில்லை என்பது விசாரணையில் தெரியவருகிறது. ஆனால் மேற்கண்ட தொழில் நிறுவனங்களால் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் தீங்குகளை கட்டுக்குள் கொண்டுவர இந்திய பார்ாளுமன்றம் "The Air (Prevention and Control of Pollution) Act, 1981 என்ற சட்டத்தை இயற்றி அதன் அடிப்படையில் மாநிலங்களுக்கு சட்டம் இயற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**Air (Prevention and Control of Pollution) Act of 1981:-**

The effects of climate change caused by all forms of pollution became all too apparent in the early 1970s. To mitigate their harmful effects, it was believed that nations would need to pass their own laws. Thus during the United Nations General Assembly on Human Environment, held in Stockholm in June 1972, resolution was passed which implored the nations of the world to preserve natural resources such as air.

India itself had issues regarding air pollution due to a wide variety of factors such as stubble burning, **improper industrial practices,** environmental factors etc. To combat these factors, a special law was enacted under the Constitution of India, which was the Air (Prevention and Control of Pollution) Act of 1981.

**What are the definitions under the Air Act?**

The following are the definitions under the Air-(Prevention and Control of Pollution) Act.

- Section 2 (a) defines an 'air pollutants' as any solid liquid or gaseous substance which may cause harm or damage the environment, humans, plants, animals or even damage property. A 1987 amendment to the act also added **'noise'** in the list of harmful substances.
- The air act defines 'air pollution' as the presence of any dangerous pollutant that makes the air unbreathable.

Section 2 (g) of the Act also set up the Central Pollution Control Board (CPCB) whose powers extended to the whole of India. To carry out the directives of the CPCB

the act also called for the setting up of the State Pollution Control Board (SPCB) for the individual states of India

பெருநகர சென்னை மாநகராட்சியும் அனுமதியின்றி செயல்படும் தொழில் நிறுவனங்களின் மீது சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு உள்ள நிலையில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் மனுதாரரின் மனு மீது மேற்கண்ட சட்ட பிரிவுகளின்படி நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும் என்று இம்முறைமன்றம் சுட்டிக் காட்ட விரும்புகிறது. ஆனால் எந்த விதமான நடவடிக்கை எடுக்காமல் மனுவினை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7க்கு அனுப்பிவைத்தது தனது கடமையை தட்டி கழிக்கும் செயலாக இம்முறைமன்றம் கருதுகிறது.

இம்மாதிரியான நிகழ்வுகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்கள் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரிய அலுவலர்களுடன் இணைந்து கள ஆய்வு செய்து சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் மிகவும் உணர்ச்சிபூர்வமான மற்றும் பொது மக்களுக்கு ஏற்படும் உடல் நலக் குறைவு குறித்தான புகார் என்பதாலும், 2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்த்தை வழங்கியுள்ள நிலையிலும், இம்முறைமன்ற மாண்பை குறைக்கும் விதமாக, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன் உதவி ஆணையர் அல்லது பொறுப்பான பதவியில் பணிபுரியும் அலுவலர்கள் நிலையில் ஆஜராகாமல், இடைநிலை பணியாளர்களை விசாரணைக்கு ஆஜராக அனுப்பிய செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற நிகழ்வுகளில் பொறுப்பான அலுவலர்களை இம்முறைமன்ற விசாரணைக்கு ஆஜராகும்படி எல்லா மண்டல உதவி ஆணையாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பிவைக்கும்படி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும், இந்நேர்வில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள் பல காலமாக அனுமதியின்றி இயங்கி வருவதால், அப்பகுதி மக்கள் சுகாதார கேடுகளுக்கு உட்பட்டு, நோய்வாய்பட்டு அவதியுறுவதால், இந்நிறுவனங்களின் மீது ஆரம்ப நிலையிலேயே உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்காத சம்மந்தப்பட்ட முன்னாள் மற்றும் தற்போது உள்ள மண்டலம்-7ன் அலுவலர்களை பொறுப்பாக்கி உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Licence Inspectors have deposed that thousands of small tiny Industrial units are functioning in the Padi area. The Assistant Commissioner of the Zone is directed to verify whether all these units have obtained proper licence from the Greater Chennai Corporation and take action to rectify the omission at the earliest to arrest the loss of revenue due to the Greater Chennai Corporation. Failure to have completed this exercise itself is censured seriously by this Forum. Accountability for this glaring and wanton omission has to be fixed and necessary disciplinary action including recovery of the licence fees and other charges leviable as per the Corporation rules from the delinquents responsible, should be

pursued. The Deputy Commissioner of the region is directed to ensure the compliance with the Forum's order by strict follow-up and review.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. K. பாண்டுரங்கன்,
   எண்.11, ரத்தினம் சாலை,
   டாக்டர் மூர்த்தி நகர் (விரிவு),
   பாடி, சென்னை – 600 050.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (பணிகள்)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003. } *He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி,
   536, சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை,
   காமராஜர் நகர், கலைஞர் கருணாநிதி நகர்,
   அம்பத்தூர், சென்னை - 600 053.
5. துணை ஆணையர்,
   மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி,
   536, சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை,
   காமராஜர் நகர், கலைஞர் கருணாநிதி நகர்,
   அம்பத்தூர், சென்னை - 600 053. } *He is requested to ensure the implementation of this order*
6. உறுப்பினர் செயலர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   76, அண்ணாசாலை, சென்னை – 600 032. } *For information and necessary action.*
7. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 60'0 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

29/12/22

செயலாளர்.

29/12/22

1/13